# குழந்தைகளுக்கான கோவிட்-19 தடுப்பூசிகள்
# பெற்றோர்/பாதுகாவலர்கள் தெரிந்து கொள்ள வேண்டியவை

**6 மாதங்கள் மற்றும் அதற்கும் அதிகமான வயதுடையவர்களுக்கு COVID-19 தடுப்பூசி கிடைக்கின்றது.**

## குழந்தைகளுக்கு ஏன் தடுப்பூசி போட வேண்டும்?

தொற்றுப்பரவல் தொடங்கியது முதல், அமெரிக்காவில் சுமார் 13 மில்லியன் குழந்தைகள் கோவிட்-19 நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். புதிய கோவிட்-19 திரிபு அலைகள் மருத்துவமனையில் அனுமதித்து சிகிச்சை அளிக்க வேண்டிய கோவிட்-19 எண்ணிக்கையை இளையோர்களிடையே உச்சபட்சத்திற்கு செல்ல வழிவகுத்தது.

இந்த தடுப்பூசி குழந்தைகளிடையே கோவிட்-19 ஐத் தடுப்பதில் மிகச் சிறப்பாக செயல்படுகிறது என்பதை மருத்துவ சோதனைகள் நிரூபித்துள்ளன. அவர்கள் கடுமையாக நோய்வாய்ப்படுவதற்கான, மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதற்கான அல்லது கோவிட்-19 இலிருந்து இறப்பதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவாகவே இருக்கும்.

இளையோர் மற்றும் குடும்பங்களிடம் தடுப்பூசிகளைப் பற்றிய உரையாடலை எப்படி செய்வது என்பதற்கான உதவிக்குறிப்புகளுக்கு [தடுப்பூசிக்கான வழிகாட்டியைப் பற்றி பேசுதல்] என்பதைப் பார்க்கவும்.

## என் பிள்ளைக்கு நான் எப்படி தடுப்பூசி போடுவது?

18 வயதுக்குட்பட்ட சிறார்களுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ள அனைத்து தடுப்பூசிகளையும் எவ்வித கட்டணமும் இல்லாமல் வாஷிங்டன் மாகாணம் வழங்குகிறது. உங்கள் பிள்ளை கோவிட்-19 தடுப்பூசியை போட்டுக் கொள்ளலாமா என்று குழந்தையின் குழந்தை மருத்துவர் அல்லது வழக்கமாக செல்லும் கிளினிக்கில் கேளுங்கள்.

ஏற்கனவே சுகாதாரப் பராமரிப்பு வழங்குநர் இல்லாத குடும்பங்கள் Help Me Grow WA Hotline ஐ 1-800-322-2588 என்ற எண்ணில் அழைக்கலாம் அல்லது சுகாதாரப் பராமரிப்பு வழங்குநர், மருத்துவமனை அல்லது பிற சுகாதார ஆதார வளங்களைக் கண்டறிய ParentHelp123.org க்குச் செல்லலாம். இந்த சேவை இலவசமானது மற்றும் மொழி உதவியும் உள்ளது.

நீங்கள் VaccineLocator.doh.wa.gov -க்கு சென்று, வடிகட்டியை பயன்படுத்தி உங்களுக்கு அருகிலுள்ள குழந்தைகளுக்கான தடுப்பூசி உள்ள இடங்களின் பட்டியலைப் பார்க்கலாம்.

## இது வீட்டில் எப்படி உதவும்?

கோவிட்-19 தடுப்பூசியால் குழந்தைகளை நோயிலிருந்து பாதுகாக்க முடியும், அதாவது உட்புறக் கூட்டங்கள் நடத்தவோ அல்லது கலந்துகொள்ளவோ பாதுகாப்பானவை ஆகும்.



தடுப்பூசி போடுவது சிறார்கள் பாதுகாப்பாக இருக்கவும் வீட்டில் உள்ள குடும்ப உறுப்பினர்களைப் பாதுகாக்கவும் உதவும்.

சிறந்த பாதுகாப்பிற்காக பரிந்துரைக்கப்பட்ட பிற பாதுகாப்பு நடவடிக்கைகளை குடும்பங்கள் தொடர்ந்து பின்பற்ற வேண்டும்.

## குழந்தைகளுக்கு எந்த தடுப்பூசி போட வேண்டும்?



அனைத்து சிறார்களும் குறைந்த பட்சம் 2-டோஸ்களைப் பெற்றுக்கொள்ள பரிந்துரைக்கப்படுகிறார்கள். தற்போதுவரையான புதுப்பித்தலின்படி கருதப்பட வேண்டிய கூடுதல் டோஸ்கள் பரிந்துரைக்கப்படலாம்.

- **6 மாதங்கள் - 4 வயதுடைய** குழந்தைகள் ஒரு 3 டோஸ் Pfizer முதன்மைத் தொடர் அல்லது ஒரு 2 டோஸ் Moderna முதன்மைத் தொடரைப் பெறுவார்கள்.
- **5-11 வயதுடைய** குழந்தைகள் ஒரு 2 டோஸ் முதன்மைத் தொடர் பெறுவார்கள்.
- **12-17 வயதுடைய** குழந்தைகள் ஒரு 2 டோஸ் முதன்மைத் தொடர் பெறுவார்கள்.




2 டோஸ் தொடர் பெற்ற மிதமான அல்லது தீவிரமான நோயெதிர்ப்பு சக்தி குறைபாடுள்ள குழந்தைகள் அவர்களது 2 ஆம் ஊசி செலுத்திய 28 நாட்களுக்குப் பிறகு ஒரு கூடுதல் முதன்மை டோஸ் பெறவேண்டும். மேலும் 5+ வயதுடைய அனைத்து குழந்தைகளுக்கும் ஒரு பூஸ்டர் டோஸ் பெறவேண்டும்.எதிர்காலத்தில் பிற குழுக்களுக்கான கூடுதல் டோஸ்கள் பரிந்துரைக்கப்படலாம்.

**உங்கள் கேள்விகளுக்கு பதில்களைப் பெற:**

**வருகை தாருங்கள்:** VaccinateWA.org/kids

**அழைக்கவும்:** 1-833-VAX-HELP (1-833-829-4357), #-ஐ அழுத்தவும்

மொழி உதவி கிடைக்கிறது.

Vaccinate WA

CovidVaccineWA.org

## கோவிட்-19 உண்மையில் என் குழந்தைக்கு ஆபத்தானதா?

பெரியவர்களுடன் ஒப்பிடும்போது குறைவான குழந்தைகளே கோவிட்-19 நோயால் பாதிக்கப்பட்டிருந்தாலும், குழந்தைகள்:

- கோவிட்-19ஐ ஏற்படுத்தும் வைரஸால் பாதிக்கப்படலாம்
- கோவிட்-19 நோயால் நோய்வாய்ப்படவும் அல்லது இறக்கவும் செய்யலாம்
- கோவிட்-19ஐ மற்றவர்களுக்குப் பரப்பலாம்
- கோவிட்-19 இலிருந்து "நீண்ட கோவிட்" அல்லது MIS-C எனப்படும் ஆபத்தான அழற்சி நோய் போன்ற கடுமையான சிக்கல்களைப் பெறலாம்

தடுப்பூசி இந்த மக்கள்தொகையில் மிகக் குறைவான பக்க விளைவுகளைக் கொண்டிருப்பதாகக் காட்டியுள்ளது, மேலும் இது நோயிலிருந்து அவர்களை நன்றாகப் பாதுகாக்கிறது. தடுப்பூசியின் பலன்கள் கோவிட்-19 வருவதற்கான ஆபத்தை விட அதிகமாக உள்ளது.

## தடுப்பூசி என் குழந்தைக்கு பாதுகாப்பானதா?

ஆம், தடுப்பூசி குழந்தைகளுக்கு மிகவும் பாதுகாப்பானதாகக் கருதப்படுகிறது. இளையோர்களுக்கான தடுப்பூசி மருத்துவ பரிசோதனைகளில் தீவிரமான பக்க விளைவுகள் எதுவும் கண்டறியப்படவில்லை. ஆய்வுகள் நடந்து வருகின்றன, மேலும் எச்சரிக்கை அறிகுறிகளை முன்கூட்டியே கண்டறிய அமெரிக்கா மிகவும் வலுவான தடுப்பூசி பாதுகாப்பு அமைப்புகளைக் கொண்டுள்ளது.

## குழந்தைகளுக்கு தடுப்பூசியின் பொதுவான பக்க விளைவுகள் என்ன?

குழந்தைகள் கோவிட்-19 நோயால் பாதிக்கப்பட்டால் ஏற்படும் உடல்நல அபாயங்கள் தடுப்பூசி பக்க விளைவுகளின் அபாயத்தை விட மிக அதிகம்.

மற்ற தடுப்பூசிகளைப் போலவே, மிகவும் பொதுவான பக்க விளைவுகள் கை வலி, சோர்வு, தலைவலி மற்றும் தசை வலி ஆகியவை ஆகும். இந்த அறிகுறிகள் பொதுவாக லேசானவை ஆகும்.

மருத்துவ சோதனைகளில் (ஆங்கிலம் மட்டும்) முதல் டோஸை விட இரண்டாவது டோஸுக்குப் பிறகு அதிகமான குழந்தைகள் பக்க விளைவுகளை தெரிவித்தனர். பக்க விளைவுகள் பொதுவாக லேசானது முதல் மிதமான அளவு வரை தீவிரத்தை கொண்டுள்ளன மேலும் அவை தடுப்பூசி போட்ட இரண்டு நாட்களுக்குள் ஏற்படும், பெரும்பாலானவை ஒன்று முதல் இரண்டு நாட்களுக்குள் மறைந்துவிடும்.

## குழந்தைகள் தங்கள் சந்திப்பின் போது என்ன கொண்டு வர வேண்டும்?

பெரும்பாலான சந்தர்ப்பங்களில், 18 வயதிற்குட்பட்ட ஒருவருக்கு தடுப்பூசி போடுவதற்கு பெற்றோர்களும் பாதுகாவலர்களும் ஒப்புதல் அளிக்க வேண்டும். அவர்களின் ஒப்புதலுக்கு என்ன தேவை என்று தடுப்பூசி போடும் இடத்தில் கேட்க வேண்டும்.

கிளினிக்குகள் குழந்தையின் ஐடி, காப்பீட்டு அட்டை அல்லது Social Security number (சமூகப் பாதுகாப்பு எண்) ஆகியவற்றைக் கேட்கலாம், ஆனால் நீங்கள் அவற்றைக் கொடுக்கத் தேவையில்லை.

தடுப்பூசியைப் பெற குழந்தைகள் அமெரிக்க குடிமக்களாக இருக்க வேண்டிய அவசியமில்லை. தடுப்பூசி போடும் இடங்கள் யாருடைய குடியேற்ற நிலை பற்றியும் கேட்க முடியாது. தனிப்பட்ட தரவுகள் பொது சுகாதார நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படும்.

## எனக்கு இன்னும் கேள்விகள் உள்ளன. நான் எங்கு செல்ல வேண்டும்?

மேலும் கேள்விகளுக்கான பதில்களை **VaccinateWA.org/kids** இல் கண்டறியவும். உங்கள் குழந்தையின் வழக்கமான சுகாதார வழங்குநரிடமும் நீங்கள் பேசலாம்.

Washington State Department of Health

**DOH 825-013 June 2022 Tamil**

இந்த ஆவணத்தை வேறொரு வடிவத்தில் கோர, 1-800-525-0127 ஐ அழைக்கவும். காது கேளாதோர் அல்லது கேட்கும் திறன் குறைபாடு உள்ள வாடிக்கையாளர்கள், தயவுசெய்து 711 (Washington Relay) ஐ அழைக்கவும் அல்லது civil.rights@doh.wa.gov க்கு மின்னஞ்சல் அனுப்பவும்.